**செய்தி வெளியீடு எண்:1335** **நாள்:13.12.2021**

# <u>செய்தி வெளியீடு</u>

## <u>மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில், வேளாண்மை இயக்குநர் அலுவலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.</u>

மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அவர்கள் இன்று (13.12.2021) சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள வேளாண்மை இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ,வேளாண்மைத் துறை அலுவலர்களின் உபயோகத்திற்காக ரூபாய் 53.23 லட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ள 7 புதிய பொலீரோ வாகனங்களை அவர்களின் அலுவலக உபயோகத்திற்காக கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பின்னர்,வேளாண்மைத் துறை இயக்குநர் அலுவலக கூட்டரங்கில் மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டம், வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் திரு.சமயமூர்த்தி, இ.ஆ.ப., வேளாண் வணிகம் மற்றும் விற்பனைத்துறை ஆணையர் டாக்டர் எஸ்.நடராஜன்,இ.ஆ.ப., வேளாண்மைத்துறை இயக்குநர் திரு.ஆ.அண்ணாதுரை,இ.ஆ.ப., தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்துறை இயக்குநர் டாக்டர் ஆர்.பிருந்தா தேவி,இ.ஆ.ப., வேளாண்மைத்துறை கூடுதல் இயக்குநர் திரு.ஷ்ரவன் குமார் ஜடாவத்,இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**